இயக்கவூர்தி விபத்து கோரிக்கை தீர்ப்பாயம், நாகப்பட்டினம்
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நாகப்பட்டினம்.
**MCOP.No.257/2024 ம.சா.1**

பெயர். திருமதி. ஆரியமாலா க/பெ. கோவிந்தராஜ்

கிராமம். அக்கரைப்பேட்டை வயது. 65

நாள்.06.05.2026 தொழில். வீட்டுக்குடித்தனம்

நம்பர். --

**2026** –ஆம் ஆண்டு மே மாதம் **06–**ந் தேதி **புதன்கிழமை** Act X of 1973 ஆண்டின் சட்ட விதிப்படி **திரு. G. கிருஷ்ணன், பி.ஏ., எல்எல்.பி.,** தலைமை நீதித்துறை நடுவர் நாகப்பட்டினம், ஆகிய என் முன்னால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் எனது முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்துதான். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் என்னால் உண்மை என கூறப்பட்டவைதான். எனவே நான் தாக்கல் செய்த முதல் நிலை நிரூபண பிரமாண வாக்குமூலத்தை எனது முதல் விசாரணை சாட்சியமாக பாவித்துக்கொள்ள வேண்டுகிறேன். வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டு **மனுதாரர் தாக்கல்** செய்த முதல் நிலை நிரூபண பிரமாண வாக்குமூலம் **மசா.1ன்** முதல் விசாரணையாக அனுமதிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ. 1 | 25.05.2022 | முதல் தகவல் அறிக்கை | நகல் |
| ம.சா.ஆ. 2 | -- | திருவாருர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் வழங்கப்பட்ட டிச்சார்ஜ் சம்மரி | அசல் |
| ம.சா.ஆ.3 | -- | 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீடு சம்மந்தமாக இணைவழி பதிவிறக்க ஆவணம் | நகல் |

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ. 4 | -- | எனது ஆதார் அடையாள அட்டை ( அசலுடன் சரிப்பார்க்கப்பட்ட நகல் அசலை திரும்ப பெற்றுக்கொண்டேன். ) | நகல் |
| ம.சா.ஆ.5 | -- | எனது வங்கி கணக்கு புத்தகம் | நகல் |
| ம.சா.ஆ.6 | -- | விபத்து பதிவேட்டு ஆவணம் | நகல் |
| ம.சா.ஆ. 7 | -- | மோட்டார் வாகன ஆய்வறிக்கை | நகல் |
| ம.சா.ஆ.8 | -- | ஸ்கேன் படங்கள் (2 எண்ணிக்கை) | அசல் |
| ம.சா.ஆ.9 | -- | மருத்துவ செலவுகள் ரூ.5863/-க்கான மருத்துவ பில்கள் (14 எண்ணிக்கை) | அசல் |
| மசாஆ.10 | -- | காயம் குறித்த கருத்துரை ஆவணம் | நகல் |
| நீமசாஆ.1 | -- | என்னை நாகப்பட்டினம் மாவட்ட மருத்துவ குழுவால் பரிசோதனை செய்து எனக்கு ஏற்பட்ட காயங்களின் ஊனத்தின் தன்மை 30% பகுதி ஊனம் என்று வழங்கப்பட்ட ஊன மதிப்பீட்டு சான்றிதழ் | அசல் |

மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

1ம் **எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**. இல்லை.

2**ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**.

எனது வயது, வருமானத்தை காட்டும் வகையில் நான் எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். விபத்தில் சம்மந்தப்பட்ட 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தில் நான் பயணமே செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தில் நாங்கள் எத்தனை பேர்

பயணம் செய்தோம் என்றால் 10 பயணம் செய்தோம், அதில் இரண்டு பேர் இறந்துவிட்டார்கள். யார் யார் பயணம் செய்தோம் என்ற பெயர் விபரம் தெரியுமா என்றால் தெரியாது. இந்த விபத்தில் 1ம் எதிர்மனுதார் வாகனத்தை தவிர வேறு வாகனங்கள் ஈடுபடவில்லை என்று சொன்னால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் வாகனமான டாடா ஏசி வாகனத்தில் நாங்கள் பின்னால் அமர்ந்து பயணம் செய்தோம் என்றால் சரிதான். பலகை போட்டு அமர்ந்து பயணம் செய்தோம். அப்போது மீன் கூடையும் ஏற்றி சென்றிருந்தோம். விபத்தில் அந்த மீன் கூடையில் இருந்த மீன்கள் எல்லாம் கொட்டிவிட்டது. நாங்கள் சென்ற வாகனத்தை ஓட்டிய ஓட்டுனர் கரிகாலன்தான் அஜாக்கிரதையாகவும், அதிவேகமாகவும் வாகனத்தை ஓட்டி சென்று கவிழ்த்து இந்த விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்று சொன்னால் சரிதான்.

மசாஆ.9 ஆக நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்களானது அதிகப்படியான இழப்பீடு பெறவேண்டி வழக்கிற்காக நான் தாக்கல் செய்த ஆவணங்கள் என்று சொன்னால் சரியல்ல. விபத்தில் எனக்கு ஏற்பட்ட எலும்பு முறிவானது பூரண குணமாகிவிட்டது என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்தினால் எனக்கு எந்தவித வருமான இழப்பும், நிரந்தர ஊனமும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்து 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுனரின் அஜாக்கிரதையால் ஏற்பட்டதால் நான் ஏதேனும் இழப்பீடு பெறதக்கவர் என இத்தீர்ப்பாயம் முடிவு கண்டால் அதனை 1ம் எதிர்மனுதாரரிடமிருந்துதான் நான் பெறதக்கவர் என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தில் நான் அங்கீகரிக்கப்படாத பயணியாக பயணம் செய்ததால் காப்பீடு சட்ட விதிகள்படி நான் கோரியுள்ள இழப்பீட்டினை 2ம் எதிர்மனுதாரர் செலுத்த கடமைப்பட்டவர் அல்லார் என்றும், அதனால் 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து நான் தாக்கல் செய்துள்ள மனு தள்ளுபடி செய்ய வேண்டுமென்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

G KRISHNAN

Digitally signed by G KRISHNAN
Date: 2026.05.06 10:09:14 +0530